IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

**OS.No.78/2020**

| **DEPOSITION OF WITNESS** | **PW.2** |
|---|---|

| NAME | வேல்முருகன் | TALUK | |
|---|---|---|---|
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | CASTE | |
| VILLAGE | | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 30.06.2023

வாதி தரப்பு முதல் விசாரணை

1.எனது பெயர் வேல் முருகன் எனது தந்தை பெயர் நடராஜன் மேல்வைத்துணாங்குப்பம், பேர்ணாம்பட்டில் வசித்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணையில் 23.11.2001 அன்று எனக்கும் சந்திர சேகர் மகன் மாயவேல் என்பவருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விவரத்தை சாட்சியம் அளிக்க அழைப்பாணையில் உள்ளது.

2.மேல்வைத்துணாங்குப்பத்தில் உள்ள குளத்து மேட்டில் அமைந்துள்ள கெங்கையம்மன் கோவிலை சந்திர சேகர் கட்டிய பழைய கட்டிடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்ட மாயவேல் என்பவரிடம் ஒப்பந்தம் செய்துக் கொண்டோம். ஒரு சதுரத்திற்கு 60 ஆயிரம் என்று பொருட்கள் உட்பட 10 சதுரம் கட்டித்தர 6,00,000/- ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்தம் போட்டும் போது ரூபாய் 2 லட்சமும், மேல் தளம் போட்ட போது 1 1/2 லட்சமும், முடித்த போது 2 லட்சமும் வாங்கினேன்.

3.வா.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் 2 வது கையொப்பமும் 2 வது பக்கத்தில் உள்ள 2 வது கையொப்பம், 3 வது பக்கத்தில் வலது பக்கத்தில் உள்ள 2 வது கையொப்பமும் என்னுடையது தான். நான் தற்போழுதும் கட்டிடம் கட்டும் தொழில் செய்து வருகிறேன். அதற்கு அத்தாட்சியாக கட்டிடம் கட்டும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணம் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4.வா.சா.ஆ 3 ஒப்பந்தத்தை குடியாத்தம் தாலுக்கா அலுவலகத்தில் எழுதப்பட்டது. வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தில் சாட்சியாக மேல்வைத்துணாங்குப்பத்தை சேர்ந்த வேலு என்பவரும், ரேணு என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளனர்.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.